ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2259/15 - 2021 දෙසැම්බර් මස 22 වැනි බදාදා - 2021.12.22
2259/15 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### கிழக்கு மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

கிழக்கு மாகாணத்தின்ஆளுநராகிய அனுராதா யஹம்பத் ஆகிய நான், 1989 ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள், சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையை இத்தால் அறிவிக்கின்றேன்.

**அனுராதா யஹம்பத்,**
ஆளுநர்,
கிழக்கு மாகாணம்

ஆளுநர் செயலகம்,
உவர் மலை,
திருகோணமலை.
*2021, திசெம்பர் 21.*

1A - PG 5668 — 15 (2021/12)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**கட்டளை**

*கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட திருகோணமலை மாவட்டத்திலுள்ள வெருகல் பிரதேச சபையின் தவிசாளர் அவர்களினால் 2022 ஆம் ஆண்டிற்காக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட ஆவணங்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 மற்றும் 169 ஆம் பிரிவுகளின்படி சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படாமல் இருக்கின்றமையினால், 2012 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 17 ஆம் பிரிவின்படி 2021.11.30 ஆந் திகதி முதல் தவிசாளர் பதவியிலிருந்து விலகியதாகவும் அத்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த சபையின் தவிசாளர் பதவி வெற்றிடமாக இருப்பதாகவும் கருதப்படும்.*

---

**கிழக்கு மாகாண மாகாண சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டம்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 171(ஆ) கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் கிழக்கு மாகாண ஆளுநராகிய அனுராதா யஹம்பத் ஆகிய நான், சொத்துக்கள், நிதி நிர்வாகம் அதனுடன் தொடர்புற்ற இடைநேர்விளைவான விடயங்கள் தொடர்பான இச்சட்டத்தை அதில் விபரிக்கப்படுகின்ற காலப்பகுதி வரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதியை நடைமுறைப்படுத்த இத்தால் பகிரங்கப்படுத்துகின்றேன்.*

**அனுராதா யஹம்பத்,**
ஆளுநர்,
கிழக்கு மாகாணம்

ஆளுநர் செயலகம்,
உவர் மலை,
திருகோணமலை.
*2021, திசெம்பர் 21.*

**விதி**

*கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட திருகோணமலை மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ள வெருகல் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவுகள் 168 மற்றும் 169 ஆகியவற்றின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக நிறைவேற்றத் தவிறுயுள்ளமையால் வெருகல் பிரதேச சபையின் தவிசாளருக்கான பதவி 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உள்ளூராட்சி அதிகார சபைகளின் (விடேச ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 17 ற்கு அமைய வெற்றிடமாகியுள்ளது. இதன்படி 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்திற்கு அமைய வெருகல் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான புதிய வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்காக வெற்றிடமாகியுள்ள தவிசாளர் பதவிக்குரிய நியமனத்தை மேற்கொள்ள முடியும். எனவே, நான் திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களுக்கு 2021 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள மிகுதிக்காலத்திற்கான மற்றும் மேற்கூறிய வரைபு வரவு செலவுத் திட்டத்தின் படியான 2022 ஆம் ஆண்டிற்கான பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள செலவினங்களை 2021.11.30 ஆந் திகதி முதல் வெற்றிடமாகிய பிரதேச சபையின் தவிசாளர் பதவிக்கான நியமனம் மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதி வரை செயற்படுத்த அங்கீகாரத்தினை வழங்குகின்றேன்.*

முன்மொழிவுகள்:

1. சம்பளங்களும் கொடுப்பனவுகளும்
2. பயணப்படிகள்
3. காகிதாதிகள்
4. நடைமுறைச் செலவுகள்
5. LDSP, CDLG செயற்றிட்டம் தொடர்பான செலவுகள்
6. PsDG, CBG

EOG 12 - 0224

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.